SNS INSTITUTIONS
www.snsgroups.com

SNS academy
a fingerprint school
*Sincerity, Nobility and Service*

**பயிற்சித்தாள் 4**

**வகுப்பு :** **பாடம் :** தமிழ்

**தேதி :** **கடைசி நாள்:**

**1. பின்வரும் பத்தியைப் படித்துப் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.**

மனித இனத்திற்கு ஆண்டவன் வழங்கியுள்ள அருட்கொடைகளுள் தலையாயது அறிவு. மனிதனின் செயல்பாடுகள், கண்டுபிடிப்புகள் ஆற்றலின் வீச்சுகள் ஆகிய அனைத்துக்கும் ஆதாரமாய் அமைந்து அவனை இயக்கும் உந்து விசையாகப் பயன்படுவது அறிவு ஒன்றே! தொட்டனைத்தூறும் மணற்கேணியைப் போல் கற்க கற்க ஊறிப் பெருகுவது அறிவு. ‘வெள்ளத்தால் அழியாது, வெந்தணலால் வேகாது’ என்று புலவரால் போற்றப்படும் அறிவுச் செல்வம் என்றும் அழிவதே இல்லை. பிற செல்வங்கள் பிறருக்குக் கொடுத்தால் குறைந்து விடும். ஆனால் அறிவாகிய செல்வம் மட்டும் தான் பிறருக்குக் கொடுத்தாலும் குறையாது. ஒருவன் பிறருக்கு அறிவூட்டும் போது அவனது அறிவு மென்மேலும் சிறக்கிறது; தெளிவுபடுகிறது. பிற தானங்களை விடவும் ‘வித்யா தானம்’ சிறந்தது என்று அறிஞர்கள் புகழ்வது இதனால் தான்.

**வினாக்கள்**

i. ஆண்டவன் வழங்கியுள்ள அருட் கொடைகளுள் சிறந்தது -----------------

அ) அறிவு ஆ) அழகு இ) பொருள் ஈ) வலிமை

ii. ஒருவனது அறிவு எப்போது தெளிவு படும் ---------------------------------

அ) கற்கும் போது ஆ) கல்லாத போது

இ) பிறருக்கு கற்பிக்கும் போது ஈ) பிறர் போற்றும் போது

iii. தணல் என்ற சொல்லின் பொருள்
அ) தண்ணீர் ஆ) வெந்நீர் இ) காற்று ஈ) நெருப்பு

iv. தானங்களுள் சிறந்தது
அ) வித்யாதானம் ஆ) பொருள்தானம் இ) கண்தானம் ஈ) இரத்த தானம்

v. மனிதனை இயக்கும் சக்தியாகப் பயன்படுவது
அ) பணம் ஆ) அறிவு இ) இளமை ஈ) அழகு

**2. விடை தருக**

i. ஒழுக்கமுடைமை குறித்து வள்ளுவர் வழிநின்று விளக்குக.

**3. கடிதம் எழுதுக.**

விளையாட்டுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற நண்பனைப் பாராட்டி மடல் எழுதுக. **கடிதத்தில் உனது பெயரும், முகவரியும்:** பூரணன்/பூரணி, எண்.3, கம்பர் தெரு, சோமசுந்தரம் குடியிருப்பு, மதுரை எனக் கொள்க.